**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**IA.No.6/2025**
**OS.No.328/2021**
திருமதி.கலா (R.W –1) **02.03.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. கிரைய ஒப்பந்த ஆவணத்தின் தேதி 8.9.2013 என்றால் சரி. கிரைய ஒப்பந்த ஆவணம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்த ஆவணத்தில் முன் தொகையாக ரூ.80,000/- ஆயிரம் பெற்றுக் கொண்டதாக எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம். கிரைய ஒப்பந்த ஆவணம் என்ற விவரங்கள் தெரிந்து கொண்டு தான் தரப்பினர்கள் கையொப்பம் செய்தார்கள் என்றால் ஆமாம். என்னுடைய தாயார் எப்போது காலமானார் என்றால் 2021ல் காலமானார். பிரதிவாதியின் கணவர் ராமசாமி எப்போது காலமானார் என்றால் 2013 இல் காலமானார்.

2. கிரைய ஒப்பந்த ஆவணத்தின் படி அசல் தொகை என்ன வட்டித்தொகை என்ன என்ற விவரங்கள் முதல் விசாரணையில் குறிப்பாக தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தேதி தெரியாது. ரூ.80,000/- பெற்று இருந்தோம் ஒரு லட்சமாக கொடுத்தோம். எந்த வருடம் பணம் பெறப்பட்டது எப்போது திருப்பி தந்தீர்கள் என்றால் 2013 பணம்பெற்றோம் 2019 ஆம் வருடம் திருப்பி செலுத்தி விட்டோம். அதன்படி வட்டி கணக்கு என்ன என்றால் வட்டி கணக்கு விவரங்கள் தெரியாது. என்னுடைய அம்மா மாதம் ஒன்பதாயிரம் செலுத்தி வந்தார். எத்தனை மாதம் வட்டி செலுத்தப்பட்டது எவ்வளவு பாக்கி இருந்தது என்று சொல்ல முடியுமா என்றால் முடியாது. வழக்குரை மற்றும் முதல் விசாரணை ஆகியவற்றில் எந்த

தேதியில் எவ்வளவு தொகை வட்டியாக செலுத்தப்பட்டது என்று குறிப்பிட்டு காண்பிக்கப்படவில்லை என்றால் தெரியாது.

3. அசல் வட்டி ஆகியவை மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளவாறு திருப்பி செலுத்தவில்லை, அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தொகை கொடுத்த பிறகு தான் அசல் ஆவணங்களையே பிரதிவாதியின் கணவர் கொடுத்தார். அதற்குரிய ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வட்டிக்கு பணம் எதுவும் பிரதிவாதியின் கணவர் எங்களுக்கு கொடுக்கவில்லை. சொத்தை கிரையம் பெறுவதற்காகத்தான் முன்பணம் கொடுத்தார் என்றால் தவறு. பிரதிவாதியின் கணவர் செலுத்திய முன் தொகையை வழக்கு தாக்கல் செய்த தேதியில் இருந்து இன்று வரை திருப்பி செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. அசல் தொகை மற்றும் வட்டி கொடுத்து விட்டுத்தான் உரிமை ஆவணங்களையே பெற்றோம் என்று சாட்சி தனிச்சையாக முன்வந்து கூறுகிறார். சாட்சி தனிச்சையாக முன்வந்து பணம் திருப்பி செலுத்தியதற்கு அவர்களிடம் ஆதாரம் உள்ளதாக கூறுகிறார்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2026.03.02 17:31:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.